# ஜாமக்காரன்
# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1கொரி. 2:15

**VOLUME - 6 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 9**
**SEPTEMBER 2022 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**
Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com

ஜாமக்காரன் JAMAKKARAN



கர்த்தருக்குள் அன்பானவர்களே !

வாழ்த்துகிறேன்.

2022 **ஜூலை - ஆகஸ்ட்** மாத ஜாமக்காரன் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். வழக்கமான தாமதம்தான். **செப்டம்பர் - அக்டோபர்** மாத ஜாமக்காரனையும் ஒரே கவரில் வைத்து உங்களுக்கு அனுப்ப கர்த்தர் கிருபை செய்திருக்கிறார்.

உங்கள் அனைவரது காணிக்கையும் ஒன்றுகூட தவறாது எனது **வங்கி கணக்கில்** வந்து சேர்ந்தது. MO மூலமாக, காசோலை மூலமாக அனுப்பிய **காணிக்கைகளும் வந்து சேர்ந்தது.** இந்த ஊழியத்தில் பங்குகொண்டு, ஜெபித்த உங்கள் அனைவரையும் கர்த்தர் நிச்சயம் ஆசீர்வதிப்பாராக. MO, செக், மூலமாக அனுப்பிய காணிக்கைகளுக்கு **ரசீதுகள் அனுப்பிவிட்டேன்**. ஆனால் **வங்கி வழியாக** அனுப்பிய காணிக்கைகளுக்கு **ரசீது யாருக்கும் அனுப்ப இயலவில்லை.**

கடந்த **கொரோனா லாக்டவுனுக்கு** பிறகு **இரண்டரை வருடங்களுக்கு** பிறகு தொடர்ந்து பரவும் கிருமிகளைப்பற்றி கவலைப்படாமல் **என் வயதைப் பற்றியும்** யோசிக்காமல் **ஊழியங்களை தொடங்கிவிட்டேன்**. கடந்த மூன்று

மாதங்களாக நடந்து முடிந்த **அனைத்து கூட்டங்களையும்** கர்த்தர் மிகவும் ஆசீர்வதித்தார். அதோடுகூட **ஆதிவாசிகள் மலை ஊழியத்தையும் துணிந்து தொடங்கிவிட்டேன்.** என்னோடு Dr.**முரளிதர்,** MD அவர்களும் இணைந்து **நிலம்பூர் காடுகளுக்குள் சென்று வந்த விவரம்** இந்த மாதம் பத்திரிக்கையில் வாசித்து அறியலாம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

- ☐ இந்த மாதம் சில **விசேஷித்த காரியங்களைக்**குறித்து **இம்மாத தியானமாக** உங்களோடு பகிர்ந்துக்கொள்ளுகிறேன்.

## ALL SOULS DAY - ALL SAINTS DAY

**ஆகஸ்ட் மாதம்** காலண்டரில் கண்டபடி 1, 2 தேதிகளில் All Souls Day என்றும் All Saints Day என்றும் **அனைத்து மரித்த ஆத்துமாக்களின் தினம் என்றும் மரித்த அனைத்து பரிசுத்தவான்களின் தினமாக பரம்பரை கிறிஸ்தவர்கள்** தங்கள் ஆலயங்களிலும், **கல்லறைகளுக்கும்** சென்று கொண்டாடுகிறதாக நாம் அறிவோம்.

பொதுவாக இது **ரோமன் கத்தோலிக்கர்** தங்களது ஆலயத்தில் **சிலை வைத்து** விக்கிரக ஆராதனைபோல் **வணங்குவார்கள்**. இவர்கள்தான் **பாபிலோனியர், கிரேக்கர்கள்** போல **செத்துப்போன மரியாளை பெண் தெய்வமாக்கி** அவர்முன் **ஜெப மாலையை** உருட்டிக்கொண்டே ஜெப வேண்டுதலை செய்வார்கள்.

**மரியாள்** மற்ற மனுஷரைப்போல **மரித்து போனார்** என்பதை இவர்கள் நம்பாமல் மரியாள் இயேசுவைப்போல மரித்து **உயிர்தெழுந்தார் என்று யாரோ ஒருவர் கண்டதைக் கேட்டு மரியாள் சாகவில்லை என்று நம்புகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ தான் உயிரோடு உயிர்த்தெழுந்தார். அப். 1:3, 1 கொரி 15:6** சீஷர்களுக்கும் மற்ற 500 நபர்களுக்கும் **தான் உயிரோடு** எழுந்தவராக **சகல திருஷ்டாந்தங்களுடன்** நிரூபித்து காண்பித்து **ஒலிவ** மலைக்கு சிஷர்களை தன்னுடன் அழைத்து சென்று அவர்கள் **கண்களுக்கு முன்பாக** பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். 1:5-11 **இது இரகசியமாக நடந்ததல்ல, பகிரங்கமாக பலருடைய கண்கள் பார்க்க பரமேறிப்போனார்.** ஆனால் **மரியாள் விஷயத்தில்** அப்படியல்ல எல்லாரும் சாவதைப்போல **மரியாளும் அடக்கம் செய்யப்பட்டார்.**

ஆனால் **கத்தோலிக்க சபையின் கட்டுகதைகளில்** மரியாள் பரமேறிப்போவதை **யாரோ ஒருவர் கண்டார்** என்று அறிவித்து **மரியாள் உயிரோடு எழுந்துப்போனாள்** என்று கட்டுக்கதை கட்டி மக்களை **நம்ப வைத்து** மரியாளை **பெண் தெய்வமாக்கி** விட்டனர். அவர் செய்த **அற்புதங்களுக்கு ஆதாரமாக** ஒரு கதையை பரப்பினார்கள். ஒரு சமயம் கப்பல் ஒன்று

கடலில் **திசை தெரியாமல் அலைய** (மாதா) என்று அழைக்கப்படும் **மரியாள்** அவர்களுக்கு **கடற்கரைக்கு** வரும் வழியை **திசை காட்டி அவர்களைத் தப்புவித்தார்** என்று சிலர் கூறியதால் அந்த கடற்கரையில் **வேளாங்கன்னி மாதா மீனவர்களுக்கு தரிசனமாகி** நான்தான் **உங்களை காப்பாற்றினேன்** என்று கூற உடனே **அந்த இடத்தை புண்ணிய ஸ்தலமாக்கி** மரியாளுக்கு **ஒரு ஆலயம் கட்டி** அந்த ஆலயத்துக்கு வருகிறவர்களுக்கு **பல அற்புதங்கள் நடப்பதாக** சாட்சிகள் கூற வைத்து **அதை பிரபலமாக்கினார்கள்**. இந்தியா முழுவதும் பல்வேறு மதத்தினர் **மூட பக்தியினால்** நிரம்பி வருடந்தோறும் அங்கு வந்து போகிறார்கள்.

ஆனால் சில வருடங்களுக்கு முன் கிறிஸ்துமஸ் தினத்தன்று விடியற்காலை ஆலயத்தில் ஆராதனை நடந்து கொண்டிருக்கும்போது **சுனாமி அலை** வந்து கடற்கரையில் படுத்திருந்த 27,000 குடும்பங்களை கடலுக்குள் அந்த அலை கொண்டு போய்விட்டது. ஒருவராகிலும் பிழைக்கவில்லை. அப்போதும் அந்த **வேளாங்கன்னி சிலை கை நீட்டியபடி சிலையாகவே நின்றது.** அது மக்களை காப்பாற்றவில்லை, அது **காப்பாற்றாது.** பவுல் கூறுவது போல் இந்த சிலைகள் **கண் இருந்தும்** காணாது, **வாய் இருந்தும்** பேசாது என்று எழுதியுள்ளார். என்ன வேதனை பாருங்கள் என்றாலும் மக்கள் இன்னும் அந்த சிலையை நம்பி வேண்டுதல் செய்து **நேர்சைகள்** செய்து ஜெபிக்கிறார்கள். **திருப்பதி** கோவில்போல **வேளாங்கன்னி கோயில்** உண்டியல்களும் **காணிக்கைகளாலும் நேர்சைகளாலும்** நிரம்பி வழிகிறதே ! அந்த ஆலயம் நல்ல வியாபார ஸ்தலமாக மாறிவிட்டது.

**அந்தோணியார், சவேரியார், அடைக்கலநாதர்,** அருளப்பர் ஆகிய பலருடைய **சிலைகளை** நிறுவி **அதற்கு ஒரு கோவில் கட்டி** செத்துப்போன சீஷர்களையும் இவர்கள் விட்டுவைக்கவில்லை. இவர்களையும் **தெய்வமாக்கி** வணங்கிக் கொண்டிருக்கும் **மூடபக்தி** தொடருகிறது. இன்று **CSI,** லூத்தரன், **ஆங்கிலிக்கன்** கிறிஸ்தவர்களுக்குள்ளும் இப்படிப்பட்ட **மூடபக்தி** ஆராதனை பெருகிவிட்டது. **அனைத்து பரிசுத்தவான்கள் தினம்** அனைத்து **செத்துப்போன ஆத்துமாக்களின் தினம்** என்று **காலண்டரில்** குறிப்பிட்டு அதை **பண்டிகை போல** கொண்டாடுகிறார்கள் **அப்படிப்பட்டவர்களுக்காகவே இதை எழுதுகிறேன்.**

- ☐ இந்த விஷயத்தை குறித்து முதலாவது **வாசகர்கள்** அறியவேண்டியது **மரித்த ஆவிகளைப்பற்றிய விவரங்கள்** ஆகும். ஏற்கனவே **ஜாமக்காரனிலும்** என் பிரசங்கத்திலும் அவைகளைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறேன் என்றாலும் பல வருடங்களுக்கு பின் புதிய தலைமுறை மக்கள் ஜாமக்காரனை வாங்கி வாசிக்கிறார்கள். அவர்களுக்காகவே இதை எழுதுகிறேன்.
- ☐ ஒரு மனிதன் **இறந்துப்போனால்** சரீரம் **மண்ணுக்கு** போகிறது. பிர. 12:7ன்படி **ஆவி,** ஆத்மா **கர்த்தரின் கரத்துக்கு போய் சேருகிறது.** அந்த செத்துப்போன ஆவி மனம்

திரும்பி இரட்சிக்கப்பட்டிருந்தால் **அந்த ஆவியை** கர்த்தர் Paradise பரதீசுக்கு அனுப்புகிறார். **மனம் திரும்பாதவர்** செத்துப்போனால் அந்த ஆத்துமாவை **பாதாளத்துக்கு** அனுப்புகிறார். இவைகள் இரண்டும் **பரலோகம்** Heaven **நரகம்** Hell அல்ல. **நீயாய தீர்ப்புக்கு பிறகு தான்** நரகம் பரலோகம் என்பதாக வேதம் போதிக்கிறது.

இயேசு கிறிஸ்து உயிர்தெழும் வரை **பரதேசும், பாதாளமும்** பூமியில் தான் இருந்தது. அதனால் தான் பழைய ஏற்பாட்டு பக்தர்கள் சாமுவேல், யாக்கோபு முதலியவர்கள் என் ஆத்துமா **பாதாளத்தில்** இறங்கும் முன் என்ற வார்த்தையை உபயோகிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பக்தர்கள். ஆகவே அதே பூமியில் உள்ள **பரதேசுக்குதான்** அவர்கள் சென்றார்கள் என்று அறியலாம்.

அடுத்தது **வாசகர்கள் அறிய வேண்டியது** செத்துப்போன எந்த மனிதனின் ஆவியும் **பூமிக்கு** திரும்பாது. செத்துப்போன மனிதனின் **ஆவி** எந்த மனிதர்கள் சரீரத்திலும் புகாது அல்லது நுழையாது. இதற்கு ஆதாரமாக இயேசு கிறிஸ்து கூறிய லாசரு – **ஐசுவரியவான்** உதாரணம் மூலமாக அறியலாம் ஐசுவரியவானுக்கு **ஆபிரகாம்** மூலமாக ஆவியானவர் பதில் கூறும் போது (பாதாளம்–பரதேசி) இங்கிருந்து எந்த ஆவியும் பூமிக்கு வர முடியாது என்று தெளிவாக கூறினார். அதனால் தான் பழைய ஏற்பாட்டில் உபாகமம் 18:11ல் **செத்துப்போன ஆவிகளிடத்தில்** குறி கேட்கிறவன் **சபிக்கப்பட்டவனாக** இருப்பான் என்று கர்த்தர் கூறினார். காரணம், அவைகள் **பிசாசுகள்** என்று கர்த்தர் அறிவார். இவைகளை திட்டமாக அறிந்தவரான **இயேசு அழைக்கிறார்** ஸ்தாபகர் சகோ **D.G.S.தினகரன்** அவர்கள் **செத்து போனவர்களோடு** பொது கூட்டங்களில் பேசுவார், அதை கேட்கத்தான் மக்கள் அவர் கூட்டத்தில் திரளாக கூடுவார்கள், அப்போதெல்லாம் **ஜெபத்தில் பெயர் கூப்பிடும்** பொய் தீர்க்கதரிசனம் அவர் தொடங்கவில்லை.

அந்த காலங்களில் அவரிடம் தைரியமாக செத்துப்போன ஆவியிடம் பேசாதீர்கள் என்று நேருக்கு நேர் பார்த்து எச்சரித்தது **Dr.புஷ்பராஜ்** ஆகிய நானும் அன்று எங்களோடு ஊழியத்தில் பங்குக்கொண்ட மறைந்த சகோ.**எட்வர்ட் பால்** அவர்களும்தான் சகோ.தினகரனை பார்த்து எச்சரித்து பேசினோம். எங்களுக்கு பிறகு **சென்னை** ACA சபை ஸ்தாபகர் **பாஸ்டர். சுந்தரம்** என்ற தேவனுடைய மனுஷன் (சகோ. தினகரன் அப்போது **கிண்டி** SBI வங்கி கிளை மேலாளராக இருந்தபோது) நேரில் கிண்டி SBI வங்கிக்கு சென்று கார் அருகே அவரை அழைத்து **செத்துப்போன ஆவிகளைப்**பற்றியோ **செத்துப்போன ஆவிகளிடமோ** பேசாதே ! தம்பி ! என்று எச்சரித்து, அப்படி நீ பேசினால் **மந்திரவாதிக்கும்** தேவனுடைய ஊழியக்காரனான **உனக்கும் என்ன வித்தியாசம்** என்று **எச்சரித்து** சென்றுவிட்டார், இந்த நிகழ்ச்சிக்கு பின்தான் **செத்துப்போனவர்களைப்பற்றி** பொது கூட்டங்களில் **பேசுவதை நிறுத்தினார்.**

உடனே அவருக்கு வரும் திரளான கூட்டம் **குறைய ஆரம்பித்தது,** அதன்பின் ஜனங்களை **தன்பக்கம் இழுக்க** ஜனங்களை கவர தொடங்கியதுதான் **ஜெபத்தில் பெயர் அழைக்கும்** பொய் தீர்க்கதரிசனமாகும். இதைத்தான் சகோ. **மோகன் C. லாசரசும், ஆலன் பாலும்**, சகோ. **ஸ்டீபன்** போன்ற இன்னும் ஏராளமானவர்கள் ஜெபத்தில் பெயர் அல்லது வியாதியின் பெயர் இவைகளை கர்த்தர் காண்பிக்கிறார் என்று பொய்யாய் கூற தொடங்கினார்கள்,

நம் இந்திய முதல் **பெண் ஜனாதிபதி** திருமதி. பிரதீபா பாட்டீல் அவர்களும் செத்துப்போன ஆவிகளிடம் பேசுகிறவர்களை இரகசியமாக சந்திக்க அடிக்கடி போவதாக பத்திரிகையில் எழுதினார்கள்.

ஏற்கனவே நான் கூறியதுபோல் செத்துப்போன ஆவி பூமிக்கு வராது. ஆனால் **செத்துப்போனவர்களின்** பெயரில் பிசாசு பலவீனமான **பெண்களின் சரீரத்தில்** உள்ளே புகுந்துவிடும், அதை அனேக பெந்தேகோஸ்தே சபைகளில் பிசாசை ஓட்டி ஜெபிக்கும்போது அல்லது **கைகளை வைத்து** ஜெபிக்கும்போது அவைகள் அந்த பெண்கள் மூலமாக பேசுவதை கேட்கலாம். பிசாசுக்கு பெயர் பொய்க்கு பிதா, வஞ்ஜிக்கிற ஆவி இப்படி அழைக்கப்படுகிறான்.

ஆகவேதான் **மரியாளை,** அந்தோணியாரை, அருளப்பரை நேரில் பார்த்தேன். அவர்கள் என்னாடு பேசினார்கள். என்னை தொட்டு சுகமாக்கினார்கள் என்று கூறுகிறதை நம்ப வேண்டாம். அவைகள் அத்தனையும் செத்துப்போனவர்கள் அல்ல. அவர்கள் பெயரில் பிசாசு ஜனங்களை வஞ்ஜிக்க வெளிப்படுகிறான்.

இப்படிப்பட்ட பிசாசின் ஆவிகளுக்கு உதவ **மாதா TV** போல மலையாளத்தில் Goodness போன்ற சில TV சேனல்கள் பிசாசுக்கு பக்கபலமாக இயங்குகிறது. ஜெர்மனியில் **மார்ட்டின் லூத்தர்** காலத்தில் வாட்டிக்கன் (ரோம்) **போப்** ஆண்டவர் என்பவர் **செத்தவர்கள்** பெயரில் **பாவமன்னிப்பு சீட்டு** விலைக்கு வாங்கினால் செத்தவன் குடிகாரனாகவோ, விபச்சாரக் காரனாகவோ செத்தாலும் அவர்கள் பரலோகம் போய்விடுவார்களாம்.

இந்த பொய் அறிவிப்பில் கத்தோலிக்க சபைகளுக்கு பணம் ஏராளமாக சேர்ந்தது. ஜனங்கள் வஞ்ஜிக்கப்படுவதை அறிந்த **மார்ட்டின் லூத்தர்** அவர்கள் வேத வசன ஆதாரத்தோடு அது கிறிஸ்தவ உபதேசத்துக்கு புறம்பானது, அது பிசாசின் உபதேசம் என்று எழுதி ஆலயத்தின் முன் எழுதி ஒட்டி பெரும் புரட்சி செய்தார். மக்கள் விழிப்படைந்தார்கள், உண்மையை அறிந்துக்கொண்டார்கள், மக்கள் கூட்டம் கூட்டமாக கத்தோலிக்க சபையை விட்டு விலகி **போப்பை** வெளியரங்கமாக எதிர்த்தார்கள். **புரோடஸ்டன்ட் சபை** உருவானது, சிலை

வணக்கம் நீக்கப்பட்டது, செத்துப்போனவர்களுக்காக ஜெபிப்பதை நிறுத்தினார்கள். பெரும் புரட்சியும் உயிர் மீட்சியும் கிறிஸ்தவ சமுதாயத்தில் உருவானது.

## ஆனால் பிசாசு திரும்ப வந்தது

மாதா TV போட்டா தியானமும் நடத்தும் Goodness போன்ற கத்தோலிக்க ஆர்தோடாக்ஸ் மலையாள சபைகளில் பழைய **சிலை** ஆராதனை விக்கிரக ஆராதனை திரும்ப கொண்டு வந்தார்கள். தமிழ் மாதா TVயில் செத்துப்போன நபரை விபச்சாரகாரனாக இருந்தாலும் குடிகாரனாக இருந்தாலும் பரலோகத்துக்கு அனுப்ப வேண்டுமானால் **செத்துப்போன சவத்தின்** பெயரை எழுதி **500** ரூபாய் மாதா TVக்கு அனுப்பினால் சில (சாமியார்) ஆயர்கள் ஜெபிப்பார்கள். அவர்கள் ஜெபம் அந்த செத்துப்போன சவத்துக்கு த்ரூடிக்கட் கொடுத்து பரலோகத்துக்கு அனுப்பிவிடுகிறார்களாம். எவ்வளவு பெரிய ஏமாற்று வேலை, செத்துப்போன பெண் தெய்வமாகிய மரியாளின் ஜெப மாலை விலைக்கு வாங்கி கையில், பாக்கெட்டில் வைத்துக் கொண்டால் காரில் முன்பக்கம் சிலுவையுடன் தொங்கவிட்டால் வியாதி நீங்கும் கார் விபத்து உண்டாகாது. இப்படியெல்லாம் தவறாக நம்பி அந்த ஜெப மாலை விலைக்கு வாங்கி வைத்துக்கொள்ளும் ஏமாளி கிறிஸ்தவர்கள் எத்தனை பேர் ! ஜாக்கிறதை ! இது கடைசி காலம், மாதா TVயில் கூறுவதை கேட்டு ஏமாறாதீர்கள்.

அதனால்தான் **கல்லறை திருநாள்** செத்த பரிசுத்தவான்கள் நினைவு நாள், செத்த ஆத்துமாக்களின் திருநாள் என்று கூறி நம்பி ஜெபித்துவிடாதீர்கள். செத்துப்போனவர்கள் பெயரில் பிசாசு சர்வ சாதாரணமாக தடையில்லாமல் உங்கள் வீட்டுக்குள் பிரவேசித்து உங்கள் பிள்ளைகள் உடலில் பிரவேசிக்கும் ஜாக்கிறதை !இயேசுகிறிஸ்து கூறியதை கவனியுங்கள் (இயேசு) **நானே ஜீவன், நானே வழி** நானே **சத்தியம், இயேசுவாகிய நானே வாசல்**, இந்த இயேசு என்ற **வாசல்** வழியாக அல்லாமல் பரலோகம் போக **வேறு வழி** இல்லை என்றார்,

மரியாள் தெய்வம் அல்ல, அவளிடம் வேண்டிக்கொள்ளாதீர்கள், உயிரோடு இருக்கும் உங்கள் தெய்வத்தை கேட்கும் இயேசு கிறிஸ்துவை நம்புகிறீர்களா? செத்துப்போன மரியாளை நம்புகிறீர்களா? இதைக்குறித்து இதை வாசிக்கும் கத்தோலிக்க நண்பர்கள் கேள்வி கேட்கவேண்டுமானால் தாராளமாக கேளுங்கள். கேள்விகளை வரவேற்கிறேன்.

– டாக்டர் **புஷ்பராஜ்**

# மனுஷரைக் காணாத மனுஷர்கள்

## மேற்கு தொடர்ச்சி மலை நிலம்பூர் காடுகளில் மலை ஊழியம் செய்து வந்தேன்

2022 **நவம்பர்** மாதம் முதல் **கொரோனா மரண** படுக்கையிலிருந்து எழுந்து **இரண்டரை வருடம்** கழித்து பழையபடி ஊழியம் ஆரம்பித்துவிட்டேன். முதல் **கன்வென்ஷன்** ஊழியமாக **பெங்களுர், மஹாராஷ்ட்ரா, தமிழ்நாடு** ஆகிய இடங்களில் சென்று ஊழியத்தை முடித்த உடன் **ஒரு புது தைரியமும்** எனக்குள் உண்டாகியது. அதே சமயம் **டிரைபல் மிஷன்** பொது செயலரும், **ஆனைக்கட்டி** பெத்தானி **ஆஸ்பத்திரியின்** மெடிக்கல் **சுப்பிரண்டென்ட்** ஆக ஊழியம் செய்யும் **Dr.முரளிதர்,** MD (இருதய சிகிச்சை நிபுணர்) அவர்களும் அதே **கொரோனா வியாதியில்** அகப்பட்டு என்னைவிட **அதிக கஷ்டப்பட்டு** அனேக மாதங்கள் ஆக்சிஜன் லெவல் **குறிப்பிட்ட அளவு வராமல்** பாதிக்கப்பட்ட டாக்டர் முரளிதர் அவர்களும் தற்போதும் **பூரண சுகம் பெறாத** நிலையிலும் **ஆதிவாசிகள்** ஊழியத்தில் மிகுந்த பாரம் கொண்டு என்னோடுகூட **நிலம்பூர் காடுகளுக்கு** வர ஆவல் கொண்டார். என்னோடு பேசி என்னோடு இணைந்து **பயண ஏற்பாடுகளை** திட்டமிட்டார். அதன்படி **நாங்கள் இருவரும்** ஒரு குழுவாக மற்ற மிஷனரிகளுடன் **நிலம்பூர்** காடுகளுக்கு செல்ல பயணமானோம்.


1976ம் வருடம் நான் **நிலம்பூர் ஆதிவாசிகள் ஊழியம்** தொடங்கி **சோலை நாயக்கர், மலை நாயக்கர்** ஆகிய இரண்டுவித **ஆதிவாசி** இனத்தினரிடம் **காட்டுக்குள்ளேயே** சென்று **ஆதிவாசிகளைப்போல்** நாங்களும் **பாறைகளின்** மறைவில் தங்கி சுவிசேஷம் அறிவித்தோம். ஆனால் **ஒருவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. 3 வருடங்கள்** தொடர்ந்து குழுவாக சென்று அறிவித்தும் **ஒரு ஆத்துமாகூட** இயேசுவை புரிந்துக்கொள்ளவில்லை.

அதன்பிறகு அவர்களிடமே தங்கி பழகி ஊழியம் செய்ய **மிஷனரிகளை** அனுப்பி வைத்தோம். **15 வருடங்களுக்கு பின் சுமார் 17 பேர் இயேசுவை ஏற்றுக் கொண்டு**


**ஞானஸ்நானம் எடுத்தார்கள்** என்ற செய்தியை நாங்கள் கேள்விப்பட்டு தேவனை துதித்தோம். அதன்பின் தான் **நானும் Dr.முரளியும்** அவர்களை **நேரில் காணவும்,** அங்குள்ள தேவைகளை அறியவும், சுற்றிலும் உள்ள மற்ற **மிஷனரிகளை** ஊக்கப்படுத்தவும் போன்ற ஒரு பெரும் **திட்டத்தோடு நிலம்பூ**ர் பயணப்பட்டோம்.

நிலம்பூர் சென்றடைந்து காலை 9 மணிக்கு **ஒரு ஜீப்பில்** ஏறி **ஆற்று வழி** பாதை மாதிரி உள்ள **உருள் கற்கள்** நிறைந்த ஆபத்தான பாதையில் நாங்கள் சென்ற வாகனம் சாய்ந்தும் சரிந்தும் சென்றது. அது மரண பிரயானமாக இருந்தது.

முடிவில் **மூங்கில் மரங்கள் நிறைந்த** அடர்ந்த வனத்தில் ஒரு இடத்தில் வந்து சேர்ந்தோம். அந்த இடத்துக்கு பெயர் அப்பன் Gகேப் (APPAN-G-GAP) என்று அழைக்கப்படுகிறது. அங்கு சற்று இளைப்பாறிவிட்டு அருகில் **மூங்கில்களாலும்** மரத்தாலும் **சதுரமான அகன்ற** பரண் போன்ற இடத்தில் சென்று அமர்ந்தோம். பரண் மேலே **காட்டு புற்களால் கூரை வேய்ந்திருந்தார்கள்.** அங்கு ஞானஸ்நானம் எடுத்த **சோலை நாயக்கன்,** மலை **நாயக்கன்மார்** கூட்டத்தில் உள்ள 17 பேர் குடும்பமாக வந்திருந்தனர். கூடவே மற்ற ஆதிவாசிகளும் வந்திருந்தனர். அவர்களுக்கு பின்புறம் **மிஷனரிகள்** சுமார் 10 பேர் அமர்ந்தனர்.



குறிப்பிட்ட இடமான அப்பன் G கேப் என்ற இடத்தில் மூங்கில் வனத்தில் அமர்ந்து இளைப்பாறி னோம்.



பரண்மேல் ஞானஸ்நானம் எடுத்த ஆதிவாசிகளோடு நாங்கள் எல்லாரும் அமர்ந்து கர்த்தருடைய செய்தியை **நானும் Dr.முரளிதர்** அவர்களும் அவர்களுக்கு விளங்கும் வகையில் பகிர்ந்து கொண்டோம்.

**நாங்களும்** எங்களோடு வந்த பாஸ்டர்களும் அவர்களுக்கு முன்பாக மூங்கில் தரையில் அமர்ந்தோம்.

கொஞ்ச நேரம் இயேசுவை துதித்தோம். இரண்டு பேர் ஜெபித்து நாங்கள் வந்த **நோக்கத்தையும் இயேசு அப்பா** ஆதிவாசிகளாகிய இந்த மக்களை நேசிப்பதையும் குறித்து மிஷனரி **பாஸ்டர் KT. மனோஜ்** அவர்கள் அவர்களுக்கு அறிவித்து அதன்பின் **என்னையும், Dr. முரளிதர்** அவர்களையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.



மேலே குறிப்பிட்ட **மிஷனரி** பாஸ்டர் **மனோஜ்** மூலமாகத்தான் ஆதிவாசிகளிடம் இத்தனை பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு அவர்கள் இயேசுவை கடவுளாக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்களிடம் **சாட்சிகள்** கூறும்படி கேட்டோம். **எழுத படிக்க தெரியாத** அந்த ஜனங்களுக்கு **இயேசு அப்பா** (இயேசு அப்பச்சன்) என்ற பெயர் அல்லது **வேத வசனமோ** வசனத்தின் ஆழமான அறிவோ அவர்களுக்கு இல்லை. ஆனால் **அந்த இயேசு** என்ற பெயரை உச்சரித்து இவர்கள் **பெற்று கொண்ட அற்புதமும் சுகமும் ஏராளம்**.

**குடியும், கஞ்ஜாவும்** சேர்த்து சாப்பிடும் தன் **கணவன்** குடி நிறுத்தவேண்டும். **என் கணவனை மாற்றும் என்று கூறி அழுது இயேசு அப்பா! இயேசு அப்பா!** என்ற இந்த **ஒரு வார்த்தையை** மட்டும் சொல்லி ஜெபத்தில் கெஞ்ஜியதாக கூறினார்கள். **இயேசு கிருஸ்து** அந்த ஜெபத்தையும் கனம் பண்ணி **அவள் கணவனை** மாற்றினார். குடியை, கஞ்ஜாவை நிறுத்தினார். **இன்று ஆராதனைக்கு அவர் வருகிறார்.** கடந்த ஒரு வருடமாகத்தான் இவர்கள் வீட்டில் **சிரிப்பு, சந்தோஷம்** பெருகியுள்ளது. **என் குடும்பமே** தலை கீழாக மாறிவிட்டது. இந்த ஆளின் மனமாற்றத்தையும், குடியை நிறுத்தியதையும், முகத்தில் இருந்த **சந்தோஷத்தையும்** பார்த்து மற்ற **ஆதிவாசிகளையும்** அது சிந்திக்க வைத்தது. சிலர் பகிரங்கமாக நானும் இனி

**கஞ்சா-மதுபானம்** குடிக்க மாட்டேன். **என் மனைவியை இனி அடிக்கமாட்டேன்** என்று எழுந்து நின்று எங்கள் முன் தீர்மானம் எடுத்தது எத்தனை பெரிய சந்தோஷம்.

இயேசு கூறிய **உவமானம்**போல **கொஞ்சம் புளித்த மாவு** மற்ற பிசைந்த மற்ற **மாவுகளையும் புளிக்கச்செய்யும்**. அப்படியே ஒரு குடும்பத்தில் **இயேசு அப்பா** கொடுத்த மாற்றம் **மற்ற குடும்பங்களையும்** எவ்வளவாய் மாற்ற செய்து விட்டது. அந்த **ஆதிவாசி பெண்** எழுந்து நின்று **இயேசு அப்பச்சன்** எனக்குள்ளும் என் வீட்டுக்குள்ளும் வந்தபின் உண்டான மாற்றத்தை கூறியபோது நம் ஊரில் உள்ள **பரம்பரை கிறிஸ்தவர்கள்**கூட இத்தனை அருமையாய் வார்த்தை தடுமாறாமல் **ஆனந்த அழுகையுடன்** சாட்சி கூறியிருக்க மாட்டார்கள். அந்த அளவு ஆதிவாசி பெண்ணின் சாட்சி அமைந்தது. அது எங்களை சிலிர்க்க வைத்தது.

## ஆதிவாசிகள் எங்களிடம் வைத்த கோரிக்கை

இந்த வனத்தில் இரண்டு அல்லது மூன்று வித்தியாசமான **ஆதிவாசிகள்** இனம் உண்டு. இவர்கள் எல்லாரும் கூடி ஜெபிக்க ஒரு (கட்டிடம் ) **ஆலயம் வேண்டும்**. பொதுவான இடமாகில் எல்லா **இன ஆதிவாசிகளும்** (இன) **சாதி வேறுபாடு** காண்பிக்காமல் **ஒரே இடத்தில் கூட முடியும்** என்றார்கள். அவர்கள் கோரிக்கை நியாயமுள்ளது. சீக்கிரம் **வன** அதிகாரி-**போலீஸ்-கலெக்டர்** இவர்கள் அனுமதியோடு கட்டிடம் பணிய தீர்மானித்தோம் . அங்கும் R.S.S -BJP காரர்களின் தொல்லை உண்டு. ஆகவே **கிறிஸ்தவ ஆலயமாக** கட்ட அனுமதிக்கமாட்டார்கள். ஆகவே **சமூக சேவை கூடம்** என்ற பெயரில் கட்டிடம் கட்ட வேண்டும். அதில் **சன்மார்க்க போதனை** கூறப்படும், இலவச வைத்தியம் செய்யப்படும் என்று கூறிதான் அனுமதி வாங்க வேண்டும். இந்த விவரங்களை நான் நிலம்பூர் மலையிலிருந்து இறங்கி சேலம் வந்தபின், நான் இரண்டு குடும்பத்தோடு நிலம்பூர் விவரங்கள் விவரிக்கும் போது அவர்கள் சற்றும் **தாமத்திக்காமல்** எங்கள் வகையாக **ஒரு லட்சம்** வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள். அப்போது நான் அவர்களிடம் அவசரம் வேண்டாம் அதிகாரிகளின் அனுமதி கிடைத்த உடன், **நிலம் வாங்கி** ஆலய கட்டுமான பணி தொடங்கும் போது உங்களுக்கு அறிவிப்போம். அப்போது கொடுத்தால் போதும் என்றேன். ஆலயம் கட்ட அதிகம் செலவு ஆகாது **செங்கல்** கொண்டு கட்டிடம் கட்ட போவதில்லை தற்காலிகமாக **ஒரு ஷெட்** போல முதலில் அமைத்து ஆராதனை தொடங்கலாம். அதை R.S.S., BJPகாரர்கள் சேதப்படுத்துகிறார்களா என்று பார்ப்போம். அதன்பின் ஆலய கட்டிடம் கட்டலாம் என்றோம்.

# விடை பெற்றோம்

**மிஷனரி மூலமாக** ஆதிவாசிகளுக்கும், எங்களுக்கும் சேர்த்து மதிய உணவு தயாரித்திருந்தார்கள். **பொடி நெத்திலி கருவாடு** வறுத்து **குச்சி கிழங்கு** (கப்பா) TAPIYOKA வேக வைத்திருந்தார்கள். பிறகு பெரிய அரிசியினால் சாதம் உண்டாக்கி சாம்பாரும் வைத்து பறிமாரினார்கள். சாப்பாடு நன்றாகவே இருந்தது. அவர்கள் அடிக்கடி சாப்பிடும் **காட்டு கிழங்கை** காட்டினார்கள். **கரடி** அதை விரும்பி சாப்பிடுமாம். நல்ல வேலை அதை எங்களுக்கு மதிய உணவாக கொடுக்கவில்லை. பிறகு ஜெபித்து பாஸ்டர் ஆசீர்வாதம் கூற **நிலம்பூர் அடிவாரம்** நோக்கி பயணமானோம்.

அந்த ஆதிவாசிகள் எங்களிடம் காண்பித்த அன்பும் வரவேற்பும் எங்கள் களைப்பை நீங்க செய்தது. வழியெல்லாம் கர்த்தரை துதித்துக்கொண்டே வந்துசேர்ந்தோம்.

**வசனமே தெரியாத** அந்த ஆதிவாசி மக்கள், **இயேசுவின் இரத்தம்** குறித்து அறியாத அந்த ஆதிவாசி மக்கள் **இயேசு** என்ற அந்த அற்புத ஒரு **நாமத்தை** மட்டும் கூறியே வியாதியிலிருந்து **சுகம்** பெற்று, **குடி**, கஞ்ஜாவுக்கு பிறந்ததிலிருந்து அடிமையான அந்த **மக்கள் விடுவிக்கப்பட்டு** சுகம் பெற்றது எத்தனை பெரிய ஆச்சரியம். எத்தனை பெரிய அற்புதம். அந்த **இயேசுவின் நாமத்தனால்** வசனம் அறியாத, ஜெபிக்க தெரியாத அந்த மக்கள் **பிசாசின்** கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் என்பது எத்தனை **பெரிய அற்புதம்.!** இயேசுவின் நாமத்துக்கே மகிமை உண்டாவதாக.!



இப்படிப்பட்ட மக்களுக்குத்தான் அற்புதம் சுகம் தேவை, அதன் மூலம் தான் இயேசுவை இவர்கள் **தெய்வமாக** ஏற்றுக்கொள்ள முடியும். இயேசு கிறிஸ்துவும் - மாற்கு 16:20ல் **கர்த்தர் அவர்களுடேனேகூட கிரியை நடப்பித்து அவர்களால் நடந்த அடையாளங்களே வசனத்தை உறுதிப்படுத்தினார்.** ஆமென்.

மலையிலிருந்து கீழே இறங்கிய உடன் **ஆதிவாசிகளின் பிள்ளைகளுக் கென்று** ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தனர். அந்தந்த மிஷனரி பணிதளங்களுக்கு வாகனங்களை அனுப்பி பிள்ளைகள் கூட்டத்தில் கலந்துக்கொள்ள நல்ல ஏற்பாடுகளை மிஷனரிகள் செய்திருந்தனர். படத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் அனைவரும் ஆதிவாசிகளின் பிள்ளைகள். நான் **கதை, பாட்டுகள்** மூலம் **இயேசு ஒரே ஒரு மனுஷனை தேடி வந்ததை** கூறி இப்படித்தான் இயேசு இந்த மலையில் வாழும் உங்களை நேசிப்பதால் இயேசு **தன்னை** உங்களுக்கு வெளிபடுத்த சித்தமுள்ளவராகி **மிஷனரிகளை உங்களிடம் அனுப்பி**, இயேசுவைப்பற்றி அறிவித்து அதன் காரணமாகத்தான் இன்று இங்கு திரளாய் கூடியிருக்கிறீர்கள். **இயேசு அப்பாவை** நீங்களும் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினேன். அதன்பின் Dr. **முரளிதர்** சுருக்கமாக எளிமையான முறையில் இயேசுவை பிள்ளைகளுக்கு விளங்க வைத்தார்கள். ஆதிவாசிகள் **மிஷனரிகளை** மிகவும் நேசிப்பதால் தன் பிள்ளைகளை மிஷனரிகளை நம்பி இக்கூட்டத்துக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த பிள்ளைகளுக்கு மதிய உணவு அளித்து இருட்டுவதற்குள் அவரவர்களின் இருப்பிடத்துக்கு காடுகளுக்குள் பத்திரமாக அனுப்பி வைத்தார்கள்.



## ஞாயிறு காலை ஆராதனை

நிலம்பூரில் உள்ள IPC **சபையில்** ஞாயிறு காலை ஆராதனை நடந்தது. நான் கர்த்தருடைய செய்தியை பகிர்ந்துக்கொண்டேன். Dr. முரளிதர் அவர்களும் செய்தியளித்தார்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

## வெற்றியுடனும் ஆரோக்கியத்துடனும் திரும்பினோம்

**டிரைபல் மிஷன்** ஊழியத்தை **நிலம்பூர் ஆதிவாசிகளிடம்** 1976ம் வருடம் தொடங்கிய நான் **அநேக ஆண்டுகளுக்கு** பிறகு 2022 நவம்பர் மாதம் அதே **நிலம்பூர்** ஆதிவாசிகள் காடுகளுக்கு சென்று வந்தது மிகுந்த சந்தோஷத்தை அளித்தது. **நிலம்பூர்** ஆதிவாசிகளிடம்

சுவிசேஷம் அறிவிக்க மூன்று முறை குழுக்களாக சென்று சுவிசேஷம் அறிவித்தும் ஒரு பலனும் கிடைக்காமல் ஒரு ஆத்துமாகூட இயேசுவை ஏற்றுக்கொள்ளாதது என் ஊழியத்தில் உண்டான பெரும் தோல்வியாகும். ஆனால் **டிரைபல் மிஷன்** மிஷனரி ஸ்தாபனத்தை தோற்றுவித்து மிஷனரிகளை **நிலம்பூருக்கு** அனுப்பி மிஷனரிகள் அங்கேயே தங்கி மிகவும் கஷ்டப்பட்டு ஆதிவாசிகளை தனித்தனியாக சந்தித்து வியாதி, பிசாசு பிடித்தவர்களையும் சந்தித்து ஜெபித்து அவர்கள் சுகம் பெற்றபின் கணவன்மார் **குடி, கஞ்ஜா** பழக்கத்திலிருந்து விடுதலையான பின் கொஞ்ஜ கொஞ்ஜமாக மிஷனரிகளை வீடுகளில் அனுமதித்து மரியாதை செய்து வீட்டில் ஜெப கூட்டம் நடத்த சொல்லும்அளவு **இயேசுவையும்** மிஷனரிகளையும் நம்பி ஏற்றுக் கொண்டார்களே எத்தனை பெரிய அதிசயம். வேதம் கூறுகிறது மாற் 16:20 **கர்த்தர் அவர்களுடனே கூடக்கிரியை நடப்பித்து அவர்களால் நடந்த அடையாளங்களாலே வசனத்தை உறுதிப்படுத்தினர்.** இப்படிப்பட்ட **அற்புதங்களை** ஆதிவாசி குடும்பம் அவரவர் வீட்டில் நடந்ததால் இவர்கள் அறிவிக்கிற தெய்வம் உண்மை உள்ளவர், வல்லமை உள்ளவர் என்பதை கண்களால் கண்டனர். சிறுவயதிலிருந்து குடும்பமாக மதுபானம் குடித்து, கஞ்ஜாவையும் மென்று வீட்டில் தினசரி அடியும் வெட்டும் குத்துமாக செயல்பட்ட தன் கணவன் ஒரே இரவில் குடியை நிறுத்தினான், கஞ்ஜாவையும் நிறுத்தினான்.

தன் மனைவி பிள்ளைகளை நேசித்தான் இப்போது உளருவதில்லை, அடிப்பதில்லை, பிள்ளைகள் இவன் குடியால் நடத்தும் அட்டூழியத்தால் ஒவ்வொரு இரவும் பிள்ளை அருகில் உள்ள வேறு குடிசையில் சென்றுபடுத்து உறங்கி மறுநாள் பயந்துக்கொண்டே வீட்டுக்கு வருவார்கள்.ஆனால் இப்போதோ தன் தகப்பன் குடிப்பதில்லை, திட்டுவதில்லை அடிப்பதில்லை என்றால் இது சாதாரண அற்புதமா மனைவியின் **இயேசு அப்பா** என்று கெஞ்ஜீம் கண்ணீருள்ள ஜெபம் கணவனை மாற்றியது. மனிதனின் தவறான சுபாவத்தை மாற்றுகிற தெய்வம் **இயேசு** என்று வசனம் தெரியாத அந்த ஆதிவாசி பெண் தன் அனுபவம் மூலமாக அறிந்தாள் என்றால் இதை வாசிக்கிற சகோதரனே! சகோதரியே ! உன் குடும்பத்தின் பிரச்சனை இயேசுவால் மாற்ற முடியாதா? உன் மருமகளை, மகனை மாற்ற முடியாதா? விசுவாசிக்கிறவர்களுக்கு சகலமும் கூடும் என்று வேதம் கூறுகிறது.

**நிலம்பூர்** ஆதிவாசிகளிடம் இதை நேரில் கண்டேன் 1976 முதல் 3 வருடங்கள் நாங்கள் சுவிஷேசம் அறிவித்தும் மாறாத அந்த மக்கள் மிஷனரிகள் மூலமாக கர்த்தர் அற்புதங்களை நடப்பித்தார். இன்று 17 பேர் இயேசுவே தெய்வம் என்று ஞானஸ்நானம் எடுத்து ஆராதிக்கிறார்கள். அற்புதத்திலும் அற்புதம் என் மரணத்துக்குமுன் இந்த அற்புதங்களை நேரில் காண செய்த தேவாதி தேவனுக்கு துதி , கனம், மகிமை உண்டாவதாக. ஆமென்!

# நிலம்பூர் ஆதிவாசிகள் ஆரம்ப விவரங்கள்



1976ம் வருடம் **முதல் குழுவாக** என்னோடு நிலம்பூர் காடுகளுக்குள் மலை ஏறின சகோதரர்கள் 5 பேர் படத்தில் காணலாம்

**1. Mr. தோமாச்சன் 2. Mr. குரியாகோஸ்**
**3. Mr. மோகன்குரியன்**
(டிரைபல் மிஷன் ஆரம்பித்த புதிதில் பொது செயலராக செயலாற்றியவர்)
**4.Mr. தங்கச்சன் 5. Dr. புஷ்பராஜ்**

படத்தில் தாடி வளர்த்திருப்பவர் **பாஸ்டர் ஜான்** (வயது 98) . நாங்கள் மலை ஏறும் முன் ஜெபித்து எங்களை வழி அனுப்பியவர். நாங்கள் ஒவ்வொருவரும் **வித்தியாசமான சபையை** சேர்ந்தவர்கள் என்றாலும் எல்லாரும் இரட்சிக்கப்பட்டவர்களும், **ஒரே ஆவியானவரால்** நிரப்பப்பட்டவர்களும், ஏக சிந்தனை உள்ளவர்களுமாய் இருந்தார்கள். நான் தமிழ்நாட்டை சேர்ந்தவன். இவர்கள் யாரையும் நேரில் கண்டதும் இல்லை பழக்கப்பட்டதும் இல்லை. ஆனால் **நிலம்பூர்** சோலை நாயக்கன் ஆதிவாசிகளைப்பற்றி **மலையாள மனோரமா** மலையாள பத்திரிக்கையில் வாசித்து அவரவர் ஜெப குழுக்களில் பகிர்ந்துக்கொண்டு எப்படியும் மனுஷரை காணாத அந்த காட்டுவாசிகளை கண்டு விவரம் அறியவேண்டும் என்ற ஆவலில் இரண்டு பேராய் கேரளா **ஆலுவாய்** ரயில்வே ஸ்டேஷனில் தனித்தனியாக அந்த குறிப்பிட்ட தினசரி பேப்பரை கையில் வைத்துக்கொண்டு பேசிய இருவரை மற்ற இடத்திலிருந்து வந்த இருவர் எதிர்பாராமல் சந்தித்து ஒரே விஷயத்தோடு பேசி கொண்டிருந்தனர். நான் தனியாக அதே ரயில்வே ஸ்டேஷனில் ரயில் வருகைக்காக நின்றுக்கொண்டிருந்தேன். அப்போது எதிர்பாராத விதமாக அந்த நான்கு பேர்களை கண்டபோது அவர்கள் மலையாளிகளானதால் அவர்களிடம் **நிலம்பூர்** செல்லும் வழியை கேட்டேன். நான் செல்லும் காரணம் அறிந்த அவர்கள் தங்களையும் அறியாமல் **அல்லேலுயா** ஸ்தோத்திரம் ! கர்த்தாவே! என்று என்னை கட்டி பிடித்துக் கொண்டு தாங்களும் நிலம்பூர் செல்லவே வந்தோம் என்றார்கள். பிறகு சந்தேகத்தோடு நீங்கள் ஒற்றைக்கு எப்படி ஆதிவாசிகளை சந்திக்க முடியும் என்று கேட்க நான் சொன்னேன் நான் ஒரு கன்வென்ஷன் பிரசங்கியார். நிலம்பூர் CSI சபையில் இரண்டு முறை சில வருடங்களுக்கு முன் பிரசங்கம் செய்ய

சென்றிருக்கிறேன். அந்த நிலம்பூர் சபையில் **வன அதிகாரி** ஒருவரும் கிராம சேவகர் ஒருவரையும் எனக்கு தெரியும் அவர்களுக்கு என் **மலையாள ஜாமக்காரன் பத்திரிகை** மாதா மாதம் செல்கிறது. அவர்களை சந்தித்தால் அங்குள்ள CSI ஆயர் Rev.**ஜான்விஸ்வநாதன்** அவர்கள் மூலமாக ஏதாவது வழிபிறக்கும் என்ற நம்பிக்கையோடு தனிமையாக புறப்பட்டு வந்தேன் என்றேன். ரயில் வரும் நேரம் நெருங்கிவிட்டபடியால் நாங்கள் ஐவரும் கைகளை கோர்த்து அந்த பிளாட்பார்மிலேயே, எல்லா ஜனங்களும் எங்களை பார்க்க கைகளை இணைத்து எங்கள் பயணத்துக்காக ஜெபித்தோம். வெவ்வேறு இடங்களிலிருந்து வந்த எங்கள் **ஐந்து பேரையும்** ஒரே மிஷனரி ஊழியத்துக்காக ஒரே நோக்கத்துக்காக **ஒன்றாக இணைத்ததற்காக** தெய்வத்தை ஸ்தோத்திரம்.

அதன்பின் டிரைபல் மிஷன் ஆலமரம்போல வளர்ந்தது ஏராளமான மிஷனரிகளால் பெருகி வளர்ந்தது. Dr. **முரளிதர்** அவர்கள் டிரைபல் மிஷன் பொருப்பேற்ற உடன் ஆஸ்பத்திரிகள், ஆதிவாசி பிள்ளைகளுக்காக **மெட்ரிகுலேஷன் ஆங்கில பள்ளி,** வயது **முதிர்ந்தோர் இல்லம்,** ஆவிக்குறிய கூட்டங்கள் நடத்த **பெரிய ஆடிட்டோரியம்,** தங்கும் அறைகள் என்று பல புதிய திட்டங்கள் உருவாகின. அதோடு **இந்தியா முழுவதும்** மிஷனரி பணிதளங்கள் உருவாகின. பல இடங்களில் ஆலயங்களும் ஆராதனைகளும் நடைபெற்றது.


ஆரம்பத்தில் 1967ல் நாங்கள் சந்தித்த **ஆதிவாசி பெண்களும்,** ஆண்களும் **மேல் வஸ்திரங்கள் இல்லாதிருந்தார்கள்.** எங்களிடம் பேச பயப்பட்டார்கள். 1967 வருடம் அன்று கண்ட **சோலை நாயக்கன்மார்** ஆதிவாசிகளின் படங்களையும் அவர்கள் தங்கிய இடங்களையும் கீழே நீங்கள் காணலாம். இந்த படத்தில் காணும் நபரின் பெயர் **வீரன்**. இன்று இவனுடைய **கொள்ளு பேரன் இயேசுவை** ஏற்றுக்கொண்டு **ஞானஸ்நானம் பெற்று** சபைக்கு வருகிறான். எங்கள் முதல் பயணத்தில் இவர்களை சந்தித்த போது இவர்கள் இரண்டு வித்தியாசமான இடங்களில் குடியிருந்தார்கள்.

உயரமான பரண் மூங்கில் கனுவை ஏணியாக பாவித்து பாறையில் மேலே ஏறுவார்கள். அந்த பாறையில்தான் அவர்கள் குடியிருப்பு.

**பாறை பிளவில்** சிலர் குடியிருக்கிறார்கள். நாங்களும் அந்த பாறையில் அதில் **கஷ்டப்பட்டு ஏறி** சென்று அவர்கள் அருகில் அமர்ந்து அவர்களிடம் பேசினோம். சுவிசேஷம் அறிவிக்க வில்லை. காரணம் பாஷை விளங்கவில்லை. இரண்டாம் பயணத்தில் தான் அவர்களுக்கு **இயேசு** என்ற நாமத்தைப்பற்றி மட்டும் அறிமுகப்படுத்தினோம்.

இரண்டாம் முறை நாங்கள் சந்தித்த போது உடலை மறைக்க அவர்களுக்காக துணிகளை உடுத்தி பழக்கப்படுத்தினோம். எங்கள் இரண்டாம் பயணத்தில் நிறைய உடைகளை விசுவாசிகளிடம் கேட்டு **வாங்கி கொண்டுபோய் கொடுத்தோம்.**

# 1967ல் நான் நிலம்பூரில் சந்தித்த ஆதிவாசி மக்கள்



1967ல் நான் நிலம்பூர் **சோலை நாய்க்கன்மார்** என்ற ஆதிவாசிகளை சந்திக்க சென்றபோது முதலில் இவர்கள் உடலில் வஸ்திரம் இல்லாத நிலையில்தான் சந்தித்தோம். இந்த படத்தில் உள்ள ஆணின் பெயர் **வீரன்.** இவனுடைய கொள்ளுபேரன்தான் இப்போது நம் டிரைபல் மிஷன் மிஷனரிகள் மூலமாக **இயேசுவை** ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று ஆராதனைக்கு வருகிறான்.



இரண்டாம் முறை நான் மறுபடியும் மற்றோரு குழுவினரோடு இந்த ஆதிவாசிகளை சந்திக்க சென்றபோது சில குடும்பங்கள் கொடுத்த ஆடைகளை கொண்டுபோய் அணிய செய்தோம். இப்போது ஓரளவு உடல் மறைக்கும் வகையில் உடை உடுத்துகிறார்கள். **கேரளா** அரசாங்கமும் இப்போது இவர்களுக்கு பெரிய உதவிகளை செய்து வீடுகள் கட்டி கொடுத்துள்ளது.

9ம் பக்கத்தில் சாட்சி சொன்ன பெண்ணையும் மற்றவர்களையும் படத்தில் காணும் போதே எவ்வளவு சீக்கிரம் உடை அணியும் நாகரீகத்தை கற்றுக்கொண்டார்கள் என்று அறியலாம்.

# மரண அறிவிப்பு



Pastor **Dr. P.M. Thomas**

KEF காஷ்மீர் இவான்ஜீலிக்கல் பெல்லோஷிப் ஸ்தாபகரும் பாஸ்டருமான **Dr.P.M.Thomas** அவர்கள் தனது **94ம் வயதில்** மகிமைக்குள் பிரவேசித்தார். பாஸ்டர் தாமஸ் அவர்கள் என் ஆவிக்குரிய நண்பரும் நான் மதிக்கும் சிறந்த ஊழியருமாவார், இமயமலை பிராந்தியங்களில் **காஷ்மீர் உதம்பூர்** ஆகிய பகுதியில் சுவிசேஷம் அறிவிக்க சென்ற முதல் தென் இந்தியர் ஆவார். கோட்டயத்தில் Govt. உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி வந்த இவர் அரசாங்க வேலையை உதறி தள்ளிவிட்டு இந்தியாவின் வடகோடியில் வாழும் மக்களை குறித்து அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கும் பாரம்கொண்டு தன் மனைவியையும் கூட்டிக் கொண்டு காஷ்மீர் நோக்கி பயணமானார்,



Dr. Pushparaj - Dr. P.M. Thomas

இஸ்லாமியரும், பண்டிட் (பிராமின்) **மதத்தினரும்** நிறைந்த பகுதியில் சிறு வாடகை வீட்டில் குடியிருந்து அருகே சிறு குடிசையிட்டு அதில் சபை தொடங்கினார். அந்த பகுதியில் இந்திய ராணுவத்தினரின் பெரிய படைகள், ராணுவ பயிற்சி பள்ளி ஆகியவை நிறைந்த அந்த இடம், யாரும் பிரவேசிக்க கூடாத பாதுகாப்பு பகுதியாகும்.



Temporary Worship Hall prepared by Army Friends

அந்த ராணுவத்தினர் இந்த சிறு குடிசை பந்தல் ஆராதனையை கண்டு ராணுவத்தில் இருந்த கிறிஸ்தவ ராணுவ வீரர்கள் பலர் அந்த சிறு குடிசையில் நடக்கும் ஆராதனையில் பங்குக்கொண்டு பாஸ்டரின் செய்திகேட்டு பல ராணுவ வீரர்கள் மனம் திரும்பினார்கள். உடனே ராணுவீரர்கள் பலராக சேர்ந்து சிறு குடிசையை நீளமும் அகலமும் உள்ள பெரிய பந்தலாக மாற்றி நிறைய ராணுவத்தினர் ஆராதிக்கும் சபையாக கட்டிக்கொடுத்தனர். அதைத்தான் கீழே படத்தில் கண்ட முதலில் ஆரம்பிக்கப்பட்ட **பந்தல் சபை**யாகும்,



அதன்பின் கேரளாவிலும் பல சபைகள் **பாஸ்டர் தாமஸ்** சபைக்கு நிறைய பணம் சேகரித்துக் கொடுத்தார்கள். பந்தல் **சிமெண்ட் கட்டிடமாகமாறியது.** பக்கத்திலேயே அந்த பகுதி கிராம மக்களுக்கு ஆங்கிலப்பாட பள்ளி கட்டிடம் கட்டி கேரள தமிழ்நாடு பகுதிகளிலிருந்து பட்ட படிப்பு படித்த வாலிப பெண்கள் மிஷனரி டீச்சர்களாக ஊழியம் செய்ய ஒப்புக்கொடுத்து காஷ்மீர் வந்து சேர்ந்தனர். பள்ளிகூடமும் சபையும் விரிவடைந்தது, சபை நிறைய மக்கள் வந்து ஆராதித்தார்கள். தன் சொந்த சகோதரனையும் உடன் சேர்த்துகொண்டு **ராம் நகர்** என்ற பகுதிகளிலும் பள்ளி கூடமும் சபையும் தொடங்கப்பட்டது. பல வாலிபர்கள் மிஷனரிகளாக ஒப்புக்கொடுத்து அந்த உறைபணி நிறைந்த பகுதிக்கு ஊழியம் செய்ய ஒப்புக்கொடுத்தார்கள்.

Dr. புஷ்பராஜாகிய நானும் சுமார் நான்கு முறை கன்வெண்ஷன் நடத்தவும் மிஷனரி பணி நிறைவேற்றவும் சில நாட்கள் அங்கு தங்கி ஊழியம் செய்து வந்தேன். எனக்கு திருமணமானப்பின் என் மனைவி **Mrs. மங்கள வதனி** அவர்களையும் அந்த மிஷனரி பணிதளத்துக்கு அழைத்து சென்றேன்.

பாஸ்டர் P.M. தாமஸ் நடத்திய சபை ஆராதனையில் பாஸ்டர் தாமஸ் அவர்கள் கொடுத்த செய்தி மூலமாக இப்போது டெல்லியில் வசிக்கும் பிரபல கன்வென்ஷன் பிரசங்கியாரான **பாஸ்டர் P.G. வர்கீஸ்** அவர்கள் ராணுவ உடையில் பாஸ்டர் தாமஸ் சபை ஆராதனையில் கலந்துக்கொண்டபோதுதான் இரட்சிக்கபட்டு **முழுநேர ஊழியத்துக்கும்** ஒப்புக்கொடுத்து **பஞ்சாபிகளுக்கிடையே** பெரிய ஊழிய அறுவடை செய்து ஏராளமான சபைகளை பஞ்சாபிகளுக்கிடையே ஆரம்பித்தார். இப்படிப்பட்ட ஊழியர் உருவாக காரணம் பாஸ்டர் **Dr.P.M. தாமஸ்** என்றால் மிகையாகாது,



பாஸ்டர் P.M. **தாமஸ்** அவர்களும் மரித்த அவர் மனைவியும்

2019 ஆகஸ்ட் மாதம் பாஸ்டர் P.M. தாமஸ் அவர்கள் மிகவும் பலகீனப்பட்டிருக்கிறார் என்று கேள்விபட்டபோது அவர் மரிக்கும் முன் அவரைக்கண்டு பேசி ஜெபித்து வரவேண்டும் என்பதற்காக மட்டும் மிக நீண்ட தூர ரயில் பயணம் செய்து பாஸ்டரை நேரில் சந்தித்து ஜெபித்து திரும்பினேன். அது என் மனதுக்கு மிக திருப்தியாகவும் ஆசீர்வாதமாகவும் அமைந்தது.

அவர் பிள்ளைகள் பாஸ்டர் Dr. சந்தோஷ் அவர்கள் பல சபைகளுக்கும் ஊழியங்களுக்கும் தலைமை பாஸ்டர் ஆகி இன்று அவர் **பிஷப் சந்தோஷ்** என்று அழைக்கப்பட்டு சிறப்பான ஊழியம் செய்கிறார். அவர் தலைமை ஏற்றபின் **உதம்பூர்** சபையில் நடந்த கன்வென்ஷனில் நான் சென்று பிரசங்கித்தேன். பிஷப் சந்தோஷ் அவர்கள் நான் பேசியதை மொழி பெயர்த்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

பணத்திலும் ஜீவியத்திலும் உண்மையுள்ள பாஸ்டர் P.M. தாமஸ் அவர்களின் மரணம் பெரிய இழப்பாகும். அவர் வாழ்க்கைக்காக மரித்த அவர் மனைவியின் சிறந்த ஊழியங்களுக்காக தேவனை துதிக்கிறேன்.

## ONLINE BANKING (NEFT)

### Name : M G E PUSHPARAJ

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# கடவுள் உண்டா?

சகோ. எமில்ஜெபசிங்

**ஜாமக்காரன் :** நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு (FMPB) தொடங்கிய ஆரம்ப காலங்களில் ஜெபம் ஊழியம் இரண்டைத்தவிர வேறு எதையும் சிந்திக்காத வைராக்கியம் FMPBயின் பொருப்பாளர்களுக்கும், தலைவர்களுக்கும் இருந்தது. அந்த நாட்களில் சகோ.**எமில்ஜெபசிங்** அவர்கள் FMPB மிஷனரி ஸ்தாபனத்திலிருந்து விலகியபின் **விஷ்வவாணி** வானொலி நிகழ்ச்சியின் **பொருப்பாளரும்,** தலைவருமாக பணியாற்றி இப்போது மறைந்த சகோ. எமில் ஜெபசிங் அவர்கள் அன்று FMPB **பொது செயலாளராக** பொறுப்பேற்றிருந்தார்.

FMPBயின் ஆரம்ப காலத்தில் ஜெபிக்கும் **ஜெபக் குழுவினரோடும்**, FMPBக்கு உதவும் பங்காளர்களோடும் தொடர்புக்கொள்ள மிஷனரி பணித்தள விவரங்களை அறிவிக்கவும் **ஒரு பத்திரிக்கை** ஆரம்பித்தல் அவசியம் என்று சகோ. எமில் ஜெபசிங்கோடு சிலர் பகிர்ந்துக்கொண்ட போது பழைமைவாதி தலைவர்கள் பலர் அதை உற்சாகப்படுத்தவில்லை. அப்போது சகோ. எமில் அவர்களால் தன் எழுத்து தாலந்தையும் தன் மற்ற தாலந்தையும் அடக்கிவைக்க இயலவில்லை.

ஆகவே இவராகவே சிலரின் உதவியுடன் **ஆத்ம அமைதி** என்ற பத்திரிக்கையை தொடங்கி சுமார் **2 ஆண்டுகள்** மட்டும் நடத்தினார் என்று எண்ணுகிறேன். அந்த பத்திரிக்கைக்கு தமிழ்நாடெங்கும் நல்ல வரவேற்பு இருந்ததை அறிந்து அதன்பின் FMPBக்கு என்று ஒரு பத்திரிக்கையை நல்ல முறையில் வெளியிட FMPB தலைவர்களே சகோ.எமிலை உற்சாகப்படுத்தினர். அதன் பலனாக இப்போது FMPBயின் **அறைகூவல்** என்ற பத்திரிக்கை எத்தனை சிறப்பாக பல பாஷைகளில் உலா வருகிறது என்பதை அறிவோம். அதற்காக தேவனைத் துதிப்போம்.

என் அலுவலகத்தில் என் பழைய காலத்து File கோப்புகளில் காணப்பட்ட **சகோ. எமில்** அவர்களின் பழைய **ஆரம்பகால பத்திரிக்கையை** வாசிக்க நேர்ந்தது. ஜாமக்காரன் வாசகர்களுக்கும் அது பிரயோஜனமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அது FMPB யோடுள்ள என் பழைய தொடர்புகளை நினைவுக்கூற பிரயோஜனமாகவும் இருந்தது.

## அந்த பத்திரிகையில் நான் வாசித்தது

அதில் மருத்துவ கல்லூரி மாணவன் ஒருவன் கேள்விக்கு பதில் கூறும் வகையில் கடவுளைப்பற்றி எழுதிய கட்டுரை தான் இது.

### தம்பிக்கு என்ற தலைப்பில் சகோ. எமில் ஜெபசிங் அவர்கள் எழுதிய கட்டுரை

அன்புள்ள தம்பிக்கு, கல்லூரி மாணவர் போராட்டம், எனவே வீட்டில் சும்மா இருக்கிறேன். நேரம் போகவில்லை என்று எழுதியிருந்தாய். மேலும் கடவுள் உண்டென்று நீங்கள்

சொல்கிறீர்களே, இதனை யாருமே எடுத்துச் சொல்ல அவசியம் இல்லாதபடி, கடவுள் ஏன் தன்னையே தெளிவாக வெளிப்படுத்தி யாருக்கும் ஐயமே வராதபடி செய்யலாமே? என்றும் எழுதியிருந்தாய்.

முதலாவது, நேரம் போகவில்லையே! என்று ஏன் வீட்டில் வந்து உட்கார்ந்திருக்கிறாய். நீ Lution of Creation என்று புத்தகத்தை எங்கிருந்தாவது பெற்று வாசி, அப்புத்தகத்தை வீட்டிலிருக்கும் பொழுதே வாசித்துவிடு. அது உன்னைப் போன்ற கல்லூரி மாணவருக்கு மிக ஏற்ற புத்தகமாகும்.

இரண்டாவது உனது கேள்விக்கும் விடை கூறவேண்டியது என் கடமையாகும்.

கடவுள் உண்டென்பது உண்மையானால் கடவுளைப்பற்றி ஐயப்பாடு ஏன் உனக்கு வந்தது? தம்பி கடவுள் உண்டா! என்ற ஐயப்பாடு ஏன் என்பதற்கு முன், அவ்வித ஐயப்பாடு யாருக்கு உண்டாகிறது என்பதை யோசிப்போம். கடவுள் இருப்பதைப்பற்றிய ஐயப்பாடு எனக்கு வரவில்லை. உனக்கு வருகின்றது ஏன்?

ஐயம் என்பது நம்பிக்கைக் குறைவு அல்லது விசுவாச குறைவு எனலாம். வேத தாகத்தின் அடிப்படையில் அதை அவிசுவாசம் எனலாம். **கடவுளைப்பற்றிய ஐயப்பாடு** (நம்பிக்கையற்றவர்களுக்கே) **அவிசுவாசிகளுக்கே** வரும். சுவாசம் இல்லாமல் மனிதன் வாழ முடியாது. விசுவாசம் இல்லாமல் மனிதன் கடவுளைக் காணமுடியாது. **விசுவாசம்** நம்பிக்கை இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனெனில் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் தம்மிடத்தில் வேண்டிக்கொள்பவர்களுக்குப் பலன் அளிப்பவர் என்றும் விசுவாசிக்கவேண்டும். எபி 11:6. அதெல்லாம் முடியாது. **கடவுளே என் முன் வந்து நின்றால்தான் நான் நம்புவேன்** என்றால் என்ன செய்ய முடியும் தம்பி? மனிதனில் யாருக்கும் அவர் தூரமானவர் அல்ல. தேவனைக்குறித்து அறியப்படுவது மனிதருக்கு வெளிப்பட்டிருக்கிறது. கடவுளே அதை மனிதனுக்கு வெளிப்படுத்தினார்.

உன்னையே நீ எடுத்துக்கொள் தம்பி. இப்பொழுது ஏதோ மெடிக்கலில் இரண்டு ஆண்டுகள் சென்றுவிட்டதால் தானே இப்படிப் பேசுகிறாய்? கடவுளைப்பற்றி அறிய எத்தனை கூட்டங்களில் நீ பங்கு பெற்றாய். **ஜெபித்தாய்** ஏன் **நான் இரட்சிக்கப்பட்டவன்** என்றுகூட சாட்சியும் கூறினாயே. ஆனால் இன்றோ **கடவுள் உண்டென்பது உண்மையானால்** கடவுளைப்பற்றிய ஐயப்பாடு ஏன் என்று கேட்கிறாய்? காரணம் என்ன? அன்று இருந்த விசுவாசம் இன்று உனக்குள் இல்லை.

நீ ஐயந்திரிவற கடவுள் தன்னை மனுதனுக்குக் காட்டட்டுமே என்கிறாய். ஆனால் தெர்ஸ்டீகன் (Tersteegan) என்ற மேதை முற்றிலும் அறியப்பட்ட கடவுள் கடவுள் அல்ல என்கிறார்.

இங்கிலாந்து ஓர் தீவு என்றால் மறுப்பாயோ? நீ நேராக இங்கிலாந்து நாட்டைச் சுற்றி படகில் சென்று ஆராய்ச்சி பண்ணாமல் நம்புவதில்லை என்பாயோ? 2:2-4 என்பதை மறுத்து

அறிக்கை வெளியிடுவாயோ? காலையில் சூரியன் கீழ்திசையில் உதயமாகுகின்றது. இது நாளைக்கு நேரிடாது என்று கூற உன்னால் முடியுமா? மேலே எரியும் கல் கீழே விழாது என்று சொல்வாயோ? இவைகள் அனைத்து விதிமுறைகள். இந்த விதிமுறைகள் உடைவுபட்டால் உலகமே சின்னாபின்னமாகும். இதையெல்லாம் நம்புகிறோம், விசுவாசிக்கிறோம். ஐயம் வருவதே இல்லை! ஆனால் ஆண்டவன் என்றால் விளையாட்டு ! ஒரு அலட்சிய சிரிப்பு ! அதனால் பாதிக்கப்படப் போகிறவர் ஆண்டவன் அல்ல ! சிரிப்பவன் !

தம்பி, நீ எனக்கு மிக அன்பானவன் என்பதால் மிகக் கண்டிப்பாகவும் எழுதுகிறேன். உன் நல்வாழ்விற்காக எழுதுகிறேன். ஆயினும் கடவுள் தன் சவுக்கைக்காட்டி அல்லது கண்டிப்பு செய்தால் அந்த வகையில் கடவுளை நீ காணுவதை நான் விரும்பவில்லை. நீயே மனம் விழைந்து வந்தால் ஒரு சிறு விசுவாசத்துளிர் உன்னில் உருவாகினால் கடவுளை ஐயப்பாடு இல்லாமல் காணுவாய்.

**பெர்ரன்ட் ரசல்** அவர்களைப்பற்றி அதிகம் எழுதியிருந்தாய். அவர் ஆன்மாவிற்கும் உடலுக்கும் யாதொரு வேறுபாடும் இல்லையென்றும் கூறுகிறார். மனிதன் என்பவன் வெறும் அணுத்திரள் மட்டுமே என்றும் அவர் கூறுகின்றார்.

தம்பி உலகத்தில் இருப்பது ஒவ்வொன்றும் அணுக்கூட்டத்தால் ஆனவையே ஆகும். உலகில் எத்தனையோ கோடிக்கணக்கான அணுக்கள் இருப்பதை அறிவோம். இவை அனைத்தையும் குவித்துக் கூட்டிப் பகுத்துப்பிரிக்கும் சக்தி எது? ரசல் எண்ணுகின்றபடி இவை அனைத்தும் தற்செயல் நிகழ்ச்சிகளா? அப்படியானால் இது விந்தையான தற்செயல் நிகழ்ச்சி அல்லவா? கோடானுகோடி அணுத்திரள் கூட்டத்தின் நடுவே எத்தனை ஒழுங்கு! எத்தனை முறைமை! எத்தனை நுட்பம்! இவையெல்லாம் உண்மையிலே தற்செயல்தானா?

ரசல் கூறுவது உண்மையானால் உனக்கு எழுதுவது நானல்ல. ஏனெனில் அணுத்திறனின் தற்செயல் நிகழ்ச்சியால் தள்ளப்பட்டு இதனை அவைகள் உருவாக்குகின்றன. அப்படித்தானே! வேத புத்தமும், இலக்கியங்களும், கலைகளும் அணுக்கூட்டமாகத் தற்செயலாக உருவாகிவிட்டனவா?

ரசல் என்பவரின் நூல்கள் எல்லாம் அணுக்களின் தற்செயல் படைப்பாயிருப்பின் அவர் கருத்துகளை நாம் எப்படி ஏற்கமுடியும்? இவை அனைத்தும் தற்செயல் என்று சொல்லத்துணிவு உனக்கு உண்டு. அது ஆண்டவரின் செயல் என்று கூற உனக்கு துணிவு இல்லை. காரணம் என்ன? அது ஆண்டவரின் செயல் என்று கூறிவிட்டால் ரசலின் கொள்கை. பிழைப்பு, தன்னை நம்பி நிற்கும் தொண்டர்கள் என்னாவது?

தம்பி, வாதத்திற்கு மருந்து உண்டு, பிடிவாதத்திற்கு மருந்து உண்டா? நன்றாக யோசித்துப் பார். கடவுள் இருக்கிறார் என்பது நிஜமானால் ஐயம் வரக்காரணம் மனிதனின் அவிசுவாசமே தவிர வேறல்ல. உனக்காகவும், உன்னைப் போன்றவர்களுக்காவும் ஜெபிக்கிறேன்.

**இப்படிக்கு அண்ணன்.**

# கிறிஸ்து ஆலயம் ( JAI NAGAR ) பெங்களூர் கன்வென்ஷன்

## 34வது வருட சபை ஆண்டு விழா சிறப்பு கூட்டங்கள்



இந்த சபையின் ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. மக்கள் வசனத்தை கேட்க மிக வாஞ்ஜையுள்ளவர்களாக காணப்பட்டார்கள். கடைசி நாள் கேள்வி – பதில் பகுதி சிறப்பாக அமைந்தது. நான் மூன்றாவது முறையாக இந்த சபையில் பேச அழைக்கப்பட்டிருந்தேன். மக்கள், ஆயர்,





பொருப்பாளர்கள் என் மேல் காட்டிய அன்பு, சிறப்பான வரவேற்பு என்னை நெகிழ வைத்தது. ஆயர் **Rev. ஞானசெல்வி சாம்** அவர்கள் தன் ஆலயத்தையும், கிளை சபையையும் சிறப்பாக கட்டுக்கோப்பாக நடத்திக்கொண்டிருப்பதை பாராட்டுகிறேன்.

கர்த்தர் தாமே சபை மக்களை வசனத்தில் வளரச் செய்வாராக. இந்த சபை மூலமாக பல மிஷனரி ஊழியர்களை ஆதரிப்பது இந்த சபையின் ஒரு சிறப்பு.

# கர்த்தரின் ஏக்கம்

**என் ஆடுகள் சகல மலைகளிலும்**
**உயரமான சகல மேடுகளிலும் அலைப்புண்டு**
**பூமியின் மீதெங்கும் என் ஆடுகள் சிதறித்திரிகிறது.**
**விசாரிக்கிறவனுமில்லை. தேடுகிறவனுமில்லை.**

**ஏசா. 34:6**

**SEPTEMBER - 2022**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.